ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 11,737 — 1959 මැයි 5 වැනි අඟහරුවාදා — 5.5.1959

11,737 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு வைகாசி மாதம் 5 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I: தொகுதி (I)—பொது

அரசாங்க அறிவித்தல்கள்

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை இலக்கம் 122

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (i) ம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் டொன் பிலிப் றூபசிங்க குணவர்த்தனை, விவசாய உணவு அமைச்சர் ஆகிய யான், இக்கட்டளையால் எவ்வித அரிசியையும் எத் தொகையாயினும் இலங்கையின் ஒர் இடத்திலிருந்து இன்னோர் இடத் திற்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது அவர் சார்பில், அல்லது அவ்விடத்திற்குரிய பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால், அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால், வழங்கப்பட்ட "பெர்மிட் டோடு" அல்லாது, அல்லது "பெர்மிட்டில்" கொடுத்த நிபந்தனைகளின் பேரிலும் தவிர கொண்டு செல்லவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாது எனத் தடைவிதிக்கிறேன்.

மேற்கூறப்பட்ட இக்கட்டளை பின்வருவனவற்றிற்குப் பிரயோகிக்கப்பட மாட்டாது.

(அ) 80 கொத்துகளுக்கு மேற்படாத உள்நாட்டு அரிசியைக் கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல்;

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவ்வித அரிசியையும் எவ் வொருவரோ கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல்;

(இ) அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை வைத்திருக்கும் எவ்வொருவரோ அப் புத்தகத்திலுள்ள கூப்பன் பேரில் பெற்ற அரிசியை வாங்கிய இடத்திலிருந்து தான் வசிக்குமிடத்திற்குக் கொண்டு செல்லல அல்லது எடுத்துச் செல்லல்;

அல்லது

(ஈ) பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது அவர் சார்பில் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டை அல்லது "பெர்மிட்டை" வைத் திருப்பவர் அல்லது மொத்த அரிசி விற்பனையாளரால் வழங் கப்பட்ட பற்றுச்சீட்டை வைத்திருப்பவர் அப்பற்றுச் சீட்டிலோ "பெர்மிட்டிலோ" பெற்ற அரிசியை வாங்கிய இடத்திலிருந்து அம்மொத்த வியாபாரியினதோ, கூட்டுறவுச் சங்கத்தினதோ அல்லது உத்தரவு பெற்ற வியாபாரியினதோ பற்றுச்சீட்டில் அல்லது "பெர்மிட்டில்" குறிப்பிட்ட பண்டசாலைக்கோ இடத் திற்கோ கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல்.

மேற்காணும் (ஈ) கூட்டில் குறிக்கப்பட்டுள்ள "மொத்த வியாபாரி" என்பதன் பொருள் 1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிர மாணங்களின் (ஈ) தலையங்கத்தின் III ம் பாகத்தின் 5 ம் பிரமாணத் தின் கீழ் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால், கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை கூட்டுற வுப் பண்டசாலைகளுக்கோ அல்லது கூட்டுறவுக் கடைகளுக்கோ அல்லது உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கோ விநியோகம் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட, 1949 ம் ஆண்டின் 21 ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தி யமைக்கப்பட்ட 1936 ம் ஆண்டின் 16 ம் இலக்க கூட்டுறவுப் பண்டசாலை கள் சட்டத்தின் 6 ம் பிரிவினால் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு மொத்த ஸ்தாபனம், கூட்டுறவுச் சங்கங்கள், அல்லது தகைமை வாய்ந்தவரும் தகுதி உடையவருமான ஒருவர்.

மேற்காணும் (ஈ) கூட்டில் குறிக்கப்பட்டுள்ள "உத்தரவுபெற்ற வியா பாரி" என்பதன் பொருள் 1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் (ஈ) தலையங்கத்தின் III ம் பாகத்தின் 5 ம் பிர மாணத்தின் கீழ் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால், கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை குறிக்கப் பட்ட இடங்களின் ஸ்தாபனங்களுக்கோ அல்லது குழுவினருக்கோ விநியோகம் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு வர்த்தகன் அல்லது தகைமை வாய்ந்தவரும் தகுதியுடையவருமான ஒருவராவர்.

2. 15.11.58 ம் திகதியைக் கொண்ட 11,586 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 15.11.58 என்னும் திகதியைக் கொண்ட எனது கட்டளை இலக்கம் 104 ஐ எடுத்துவிடுகிறேன்.

ஜ. பீ. ஆர். குணவர்த்தனை,
விவசாய உணவு அமைச்சர்.

கொழும்பு,
1959 ம் ஆண்டு எப்ரில் மாதம் 30 ந் திகதி.

விலைக் கட்டளைகள்

திருத்தம்

1959 ம் ஆண்டு எப்ரில் மாதம் 4 ந் திகதியைக் கொண்ட 11,719 ம் இலக்க, அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் அரிசி, நெல் சம்பந்தமாகப் பிரசுரமான 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 29 ந் திகதியைக் கொண்ட எம். எல். 26 ம் இலக்க உணவு விலைக்கட்டளையின் திருத்தம்.

முதலாம் அட்டவணையின் முதலாம் பத்தியின் கீழ்க்கண்ட கடைசி இரண்டு விலைப்பகுதிகளுக்கான இரண்டாம் மூன்றும் பத்திகளில் முறையே அரிசிக்கும் நெல்லுக்கும் விதிக்கப்பட்டுள்ள விலைகள் கீழ்க்கண்டவாறு இருக்கவேண்டும்.

பல்லெகம (எல். பி. பி.)	22.12 ..	11.06
எற்றன்வல, கஹகல, மஹலகொட்டுவ நாரங்கமுவ, (எல். பி. பி.) நம்புக்கொலுவ, ஹல் மினிய, கியுலவாடிய, வில்கமுவ, கல்கொடவல, அகரஹாதிய	22.47 ..	11.24

மாத்தளைக் கச்சேரி,
1959 ம் ஆண்டு எப்ரில் மீ 24ந் உ.

பந்துல எஸ் தி சில்வா,
உணவு விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தளை மாவட்டம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது